# ஏனது பாடசாலை ஆரோக்கியமான பாடசாலையா?

1



உரு 1.1 பாடசாலை

கிராமமொன்றில் அமைந்துள்ள இப்பாடசாலையின் படத்தைப் பார்க்கும்போது உங்கள் மனதில் தோன்றுவது என்ன? இப்பாடசாலைக்கு இன்னும் மேலதிக மெருகூட்டுவதற்கு நீங்கள் முன்வைக்கும் கருத்துகள் எவை? முன்னர் 60 தொடக்கம் 70 வரையிலான மாணவர்களே கல்வி கற்ற இப்பாடசாலையில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக கடந்த 3 வருட காலத்தினுள் மாணவர்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளதெனில் அது ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்வு அல்லவா?

மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த இப்பாடசாலையின் புதிய அதிபர், ஆசிரியர் குழாம், பழைய மாணவ மாணவிகள், பெற்றோர் போன்றோர் விசேட செயற்றிட்டங்களை முன்வைத்தமையே இதற்கான காரணமாகும். இத்தகைய சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் காரணமாக எந்தவொரு பாடசாலையையும் ஆரோக்கியமான ஓர் இடமாக மாற்றுவதற்கு உங்களாலும் உதவி புரிய முடியும். உங்கள் பாடசாலையையும் மகிழ்சிகரமான இடமாக மாற்றுவதற்கு நீங்களும் பங்களிப்புச் செய்யலாம்.

## பாடசாலைச் சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டம்

**சுகாதார மேம்பாடுடைய பாடசாலை என்றால் என்ன?**
தனது முழுமையான சக்தியையும் திறன்களையும் பயன்படுத்தி கற்றல், கற்பித்தல் பணிகளுக்கும் வாழ்க்கை நடாத்துவதற்கும் பொருத்தமான வழியை உருவாக்கும் இடமே ஆரோக்கியமான / சுகாதாரமான பாடசாலை எனப்படும்.

## பாடசாலைச் சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் நோக்கங்கள்

மேலே குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அந்நோக்கங்கள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- பாடசாலை மாணவர்களதும் அவர்களின் குடும்பங்களினதும் சுகாதாரத்தைப் பேணல்.
- பாடசாலை மாணவர்களினது ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொணர்தலுக்காகச் செயற்படுதல்.
- கல்வி கற்றலின் உச்சப்பயனைப் பெறும் வகையில் சுற்றுப்புறச் சூழலை உருவாக்கல்.
- பாடசாலையை அனைவருக்கும் விருப்பமான இடமாக மாற்றுதல்.

> ஆரோக்கியமான பாடசாலையின் விசேட இயல்பானது பாடசாலைக்குரிய சில சுகாதாரக் கொள்ளைகளை ஏற்படுத்திக்கொள்ளல் ஆகும். பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இத்தகைய கொள்கைகள் பாடசாலைச் சமூகத்தினராலேயே உருவாக்கப்படல் வேண்டும்.

## பாடசாலை அடிப்படைச் சுகாதாரக் கொள்கைகள்

அரசாங்கத்தினாலோ வேறு நிறுவனங்களினாலோ ஆரோக்கியமான பாடசாலைக்குரிய எவ்விதமான சட்டதிட்டங்களும் வழங்கப்படவில்லை. பாடசாலைக்குப் பொருத்தமான கொள்கைகளை உருவாக்கிக்கொள்வதில் ஆசிரியர் குழாமும் பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் மற்றும் நலன் விரும்பிகளும் பொறுப்பாக உள்ளனர். பாடசாலைச் சுகாதாரக் கொள்கைகளை 3 பிரதான பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும்.



உரு 1.2 அழகான பாடசாலைச் சூழல்

1. பாடசாலைப் பௌதிகச்சூழல்
2. பாடசாலை உளச்சூழல்
3. பாடசாலைச் சமூகச் சூழல்

## 1. பாடசாலைப் பௌதிகச் சூழல்

பாடசாலையின் பௌதிகச் சூழல் தொடர்பான கொள்கைகள் சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களில் மிகவும் முக்கியமானவையாகும். பாடசாலையினுள் பிரவேசிக்கும் ஒருவர் காணும் காட்சிகள், பாடசாலை தொடர்பான சிறந்ததொரு எண்ணக்கருவை அவரின் மனதில் உருவாக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். பாடசாலைச் சூழலை கவர்ச்சியான முறையில் ஒழுங்கமைப்பதன் மூலம் உங்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர், கல்வி அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் மனதுக்கு உகந்த இடமாக உங்கள் பாடசாலை அமையும். பாடசாலையை மனதுக்கு உகந்த இடமாக அமைத்துக்கொள்வதற்காக கீழே குறிப்பிட்ட முறையில் சுகாதார விருத்தி சம்பந்தமான கருத்துகளை முன்வைக்க முடியும்.


படம் 1.3 சுகாதாரமான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது

- ♦ மலசல கூடங்களை முறையாகப் பயன்படுத்தல்.
- ♦ தூய நீர் விநியோகம் மேற்கொள்ளல்.
- ♦ பூந்தோட்டம் அமைத்தல், வீட்டுத் தோட்டம், தோட்ட அலங்காரம் செய்தல்.
- ♦ ஆரோக்கியமான போசனசாலை, சிற்றுண்டிச்சாலை அமைத்தல்.
- ♦ பாடசாலையின் அனைத்துக் கட்டடங்கள் உட்பட பாடசாலைச் சூழலைப் பாதுகாப்பான இடமாக வைத்திருத்தல்.
- ♦ பாடசாலைக்குள் பல்வேறுபட்ட நோய் மற்றும் போசணைக் குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்ளல்.
- ♦ குப்பைகூளங்களை முறையாக அகற்றுதல்.
- ♦ ஒழுங்கான வடிகால் அமைப்பு முறைகளை ஏற்படுத்தல்.
- ♦ வகுப்பறைகளைச் சுத்தமாக வைத்திருத்தல்.

## 2. பாடசாலை உளச் சூழல்


உரு 1.4 அழகாக அமைக்கப்பட்ட வகுப்பறைச் சூழல்

பாடசாலையின் உளச் சூழல் பொருத்தமற்றதாக இருக்குமாயின் பௌதிகச் சூழலை அழகுபடுத்துவதன் மூலம் மட்டும் பாடசாலையை ஆரோக்கியமான ஓர் இடமாக அமைக்க முடியாது. பாடசாலையில் உள்ள அனைவரினதும் மகிழ்ச்சி, உளத்திருப்தி போன்றவற்றைச் சிறந்த முறையில் பேணக்கூடிய உளச் சூழலையும் உருவாக்குதல் மிக முக்கியமானதாகும்.

அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.

- ஒரு சமூகமாக ஒன்றிணைந்து செயற்படக்கூடிய சூழல் பாதுகாப்புச் செயற்திட்டங்கள், சிரமதானம் போன்ற வேலைத்திட்டங்கள் வகுத்துத் தொழிற்படல்.
- சிறந்ததொரு சமயச்சூழலை உருவாக்குதல்.
- மாணவர்களின் ஆக்கத்திறன், அழகியல் உணர்வுகளை விருத்தி செய்யக் கூடிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
- மாணவர்களின் தேவைகளை அறிந்துகொள்ளல், தேர்ச்சிகளை விருத்தி செய்யக்கூடிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
- பாடசாலைச் சூழலை சுமுகமானதும் பாதுகாப்பானதுமான இடமாக வைத்திருத்தல்.
- சுகாதாரக் கல்வித் திட்டங்களை அமுல்படுத்தல் போன்ற விடயங்களில் கவனத்தைச் செலுத்தல் வேண்டும்.

### 3. *பாடசாலைச் சமூகச் சூழல்*

- சரியான ஆளிடைத் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் தொடர்பான வேலைத்திட்டங்கள்.
- புகைத்தல், மதுபானம் அருந்துதல், போதைப்பொருள் பயன்பாடு போன்றவற்றைத் தவிர்க்கும் வகையிலான வேலைத்திட்டங்கள்
- விளையாட்டுக் கழகங்கள், சங்கங்கள், பல்வேறுபட்ட போட்டிகள், முதலுதவி வேலைத்திட்டங்கள், பாடம் தொடர்பான வேறு செயற்பாடுகள் போன்ற பாடசாலையின் சகல பிள்ளைகளும் ஈடுபடக்கூடிய வகையிலான வேலைத்திட்டங்கள் ஊடாக ஆரோக்கியமான பாடசாலைச் சூழல் ஒன்றினை உருவாக்க முடியும்.

### *மாணவர் ஒத்துழைப்பு*


உங்கள் பாடசாலையில் சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களின்போது நீங்கள் பங்கேற்கக்கூடிய சந்தர்ப்பங்கள் பல உள்ளன. நீங்கள் பங்கேற்கக்கூடிய முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கற்று விளங்கிக்கொள்ளுங்கள்.

- தொண்டர் சேவை மூலம் சூழலைப் பாதுகாப்பானதாக வைத்துக் கொள்ளல்.
- சூழலைச் சுதந்திரமானதாயும் பாதுகாப்பானதாகவும் வைத்திருப்பதற்கு ஒத்துழைத்தல்.
- எமது கடமைகளையும் பொறுப்புகளையும் சரியான முறையில் நிறைவேற்றுதல்.

- சுகாதார மேம்பாடு தொடர்பான செய்திகளைத் தமது குடும்பத்தினருக்கும் அயலவர்களுக்கும் கொண்டுசெல்லல்.
- பாடசாலைச் சட்டதிட்டங்களுக்கு ஏற்பச் செயற்படுதல்.
- பல்வேறுபட்ட பிரிவினருடன் சிறந்ததொரு ஆளிடைத் தொடர்பினை வளர்த்துக்கொள்ளல்.
- தமது திறமைகளைச் சரியான முறையில் அறிந்து அதனை மிகச் சிறந்த முறையில் வளர்த்துக்கொள்ளல்.
- பாடசாலையில் ஒழுங்கமைக்கப்படுகின்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளல்.
- விளையாட்டுச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளல்.
- வகுப்பறை, பாடசாலைக் கட்டடங்கள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பாகப் பேணல்.
- சுகாதாரக் கழகத்தின் உறுப்பினராக இருத்தல்.
- கல்வி நடவடிக்கைகளில் முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபடல்.


## சுகாதார விருத்தி வேலைத்திட்டங்களில் பங்களிப்புச் செய்யக்கூடியவர்கள்

இவ்வேலைத்திட்டத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல உதவுவதற்கு பல்வேறுபட்ட நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் மனவிருப்பத்துடன் செயலாற்றுகின்றார்கள். இத்தகைய நிறுவனங்களை இனங்கண்டுகொள்வது மிகவும் முக்கியமானதாகும்.



✶ நோய்த்தடுப்பு, போசணைக்குறைபாடுகளில் இருந்து தவிர்ந்து கொள்ளல், தடுப்பூசி ஏற்றல் மற்றும் டெங்கு, சிக்குன் குனியா நோய்கள் ஏற்படாத சுற்றுப்புறத்தை தோற்றுவித்தல், உளப்பிரச்சினைகளில் இருந்து விடுபடல் போன்றவற்றிற்காக மேற்குறிப்பிட்ட அதிகாரிகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்தை அமுல்படுத்த உதவக்கூடிய நிறுவனங்கள்




## பாடசாலைச் சுகாதார முகாமைத்துவக் குழு

எந்தவொரு வேலைத்திட்டத்தையும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவ குழு ஒன்று அவசியமானதாகும். அதிபரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற பிரதி அதிபர் அல்லது உதவி அதிபர் இக்குழுவின் தலைவராகச் செயற்பட முடியும்.

சுகாதார உடற்கல்வி ஆசிரியர், பாடசாலையில் விவசாயம், சுகாதார உடற்கல்வி ஆசிரியர், பாடசாலையில் விவசாயம், அழகியற் கல்வி, வாழ்க்கைத் தேர்ச்சி போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், சமய பாட ஆசிரியர்கள், ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆசிரியர், சாரணர், சாரணருக்குப் பொறுப்பான ஆசிரியர், முதலுதவிக்குப் பொறுப்பான ஆசிரியர் போன்றோரையும் மற்றும் மாணவ தலைவர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய முகாமைத்துவ

குழு ஒன்றை உருவாக்கிக்கொள்ள முடியும். அத்துடன் இச்செயற்பாட்டில் ஆர்வம் காட்டுகின்ற எந்தவொரு ஆசிரியரையும் இக்குழுவில் இணைத்துக்கொள்ள முடியும். எல்லா வேலைத்திட்டங்களையும் இக்குழுவின் ஊடாக ஒழுங்கமைத்துக்கொள்ளல் மிகவும் இலகுவானதாக அமையும்.

### பாடசாலைச் சுகாதார விருத்தி வேலைத்திட்டத்தின் நன்மைகள்

உங்கள் பாடசாலையைச் சுகாதாரமான பாடசாலையாக ஆக்குவதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகளோடு இன்னும் பல்வேறுபட்ட நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

- பாடசாலையுடன் தொடர்புடைய அனைவருக்கும் பாடசாலை விருப்பத்துக்குரிய இடமாக அமைதல்.
- பாதுகாப்பான இடமாக அமைதல்.
- கற்றலுக்குப் பொருத்தமான சூழல் உருவாதல்.
- சரியான ஆளிடைத் தொடர்புகளைக் கட்டியெழுப்பக்கூடிய இடமாக அமைதல்.
- எமது தேவைகள் மற்றும் திறன்களை அறிந்துகொண்டு அவற்றை மிக உச்ச நிலைக்கு இட்டுச் செல்லக்கூடியதாய் இருத்தல்.
- நோய், விபத்து, துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றை விட்டு விலகி இருக்கக் கூடியதாய் இருத்தல்.
- மோதல்கள், முரண்பாடற்ற சமுதாயத்தை உருவாக்குதல்.
- பிரச்சினைகள், கலகங்கள், போன்றவற்றில் இருந்து விடுபடல். சமாதானமான ஒரு இடமாக அமைதல்.
- எமது சுகாதார நிலையினைப் பேணிக்கொள்வதற்கும் முன்னேற்றிக் கொள்வதற்கும் உரிய திறன்களை வளர்த்துக்கொள்ளும் இடமாக அமைதல்.

**ஒப்படை 1.1**
உங்கள் வகுப்பறையைச் சுகாதாரமான ஓர் இடமாக அமைப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றை நண்பர்களுடன் சேர்ந்து ஒழுங்கமையுங்கள். அதனைச் செயற்படுத்துங்கள். இதற்கு உங்கள் சுகாதாரப் பாட ஆசிரியரின் உதவியையும் பெற்றுக்கொள்ளுங்கள்.


இலவச விநியோகத்திற்காக